# பத்திரிக்கை செய்தி

பிப்டிக்கின் இயக்குனர் குழுமம் 03.08.2022 அன்று நடந்த கூட்டத்தில் பிப்டிக் நிறுவனத்தின் மூலம் கடன் பெற்று செயல்படாத கணக்காக உள்ள (NPA) கடன்தாரர்களுக்கு சமரசக்கடன் தீர்வு திட்டத்தை (CSS) மறுபடியும் செயல்படுத்த அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம், செயற்படா கணக்கு உள்ள கடன்தாரர்கள் தாங்கள் செலுத்த வேண்டிய கடனுக்கான வட்டியில் தங்களுக்குரிய திட்டத்தின் அடிப்படையில் கிடைக்கவுள்ள வட்டி சலுகையை பயன்படுத்தி அவர்கள் கடன் தொகையை பைசல் செய்வதாகும்.

இத்திட்டம் 31.12.2022 வரை அமலில் இருக்கும் தகுதியான கடனாளிகள் இத்திட்டத்தை ஏற்க விரும்பினால் 30.11.2022 க்குள் 25% நிலுவை அசல் தொகையை முன் தொகையாக செலுத்தி விண்ணப்பிக்கலாம். ஆகவே, பிப்டிக் நிறுவனம் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு அனைத்து கடன்தாரர்களையும் கேட்டுக்கொள்கிறது. மேலும், விபரங்களுக்கு தகுதியான கடன் பெற்றவர்கள் பிப்டிக் நிறுவனத்தை நேரில் அணுகவும். அல்லது **www.pipdic.com.** என்ற வலைதளத்தை பார்க்கவும்.

(அ. நமச்சிவாயம்)
தலைவர்
பிப்டிக்